# பிளாஸ்டிக் விழிப்புணர்வு பிரசாரம் துவக்கம்

**சென்னை, டிச. 11–**

பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்ப்பது குறித்து, பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த, நடமாடும் விழிப்புணர்வு பிரசார வாகனத்தை, முதல்வர் பழனிசாமி, நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தமிழகத்தில், 'ஜன., 1 முதல் பிளாஸ்டிக் பொருட்களுக்கு, தடை விதிக்கப்படும்' என, சட்டசபையில், ஜூன், 5ல், முதல்வர் பழனிசாமி அறிவித்தார்.

இதன்படி, ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் விரிப்புகள், தட்டுகள், டீ கப்புகள், டம்ளர்கள், உறிஞ்சு குழல்கள், கொடிகள், குடிநீர் பக்கெட்டுகள், கைப்பைகள் போன்றவற்றிற்கு தடை விதிக்கப்படுகிறது.

இந்த பொருட்களை தயாரித்தல், சேமித்தல், வினியோகித்தல், எடுத்து செல்லுதல் மற்றும் விற்பனை செய்யவும் தடை விதிக்கப்படுகிறது. இதற்கான அரசாணை, ஜூன், 25ல் வெளியிடப்பட்டது.




■ பிளாஸ்டிக் விழிப்புணர்வு பிரசார வாகனம்.

பிளாஸ்டிக் தடையை, சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த, தலைமை செயலர் தலைமையில், 10 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ள, வழிகாட்டும் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மூன்று மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். இவர்களுடன் இணைந்து செயலாற்ற, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின், ஏழு மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிளாஸ்டிக் மாசில்லா தமிழகத்தை உருவாக்க, மாநில அளவிலான பிரசாரத்தை துவக்கி வைப்பதன் அடையாளமாக, www.plasticpollutionfreetn.org என்ற இணையதளத்தை, ஆக., 23ல் முதல்வர் துவக்கி வைத்தார்.

இதன் தொடர்ச்சியாக, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த, நடமாடும் விழிப்புணர்வு பிரசார வாகனத்தை, முதல்வர் பழனிசாமி, நேற்று தலைமைச் செயலகத்தில், கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் பன்னீர் செல்வம், அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

## ரூ.3,000 கோடி வராக்கடன்?

தமிழ்நாடு பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர், வீரேந்திர குமார் பயானி உள்ளிட்ட நிர்வாகிகள் கூறியதாவது:

தமிழகத்தில், பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டிற்கு, ஜன., முதல் தடை விதிக்கப்படுகிறது. பிளாஸ்டிக் பொருட்களால் தீமை ஏற்படவில்லை; அதை சரியாக கையாளததால், மழைநீர், கழிவு நீர் கால்வாயில் அடைப்பு ஏற்படுகிறது.

தமிழக அரசு, மறுசுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கவில்லை. தமிழக அரசின் அரசாணையில் முரண்பாடு உள்ளது.

இதனால், இத்தொழிலை நம்பி உள்ள, 5,000 சிறு, குறு நிறுவனங்களை இழுத்து மூடும் நிலை வரும்; இரண்டு லட்சம் பேர் வேலை வாய்ப்பை இழக்க நேரிடும்.

பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்யக் கூடாது என்பது, நீதிக்கு எதிரானது. இதனால், தமிழக அரசுக்கு, 1,800 கோடி ரூபாய் வரி இழப்பு ஏற்படும். மேலும், இந்த நிறுவனங்கள், வங்கிகளில் பெற்றுள்ள கடன்களில், 3,000 கோடி ரூபாய் வரை, வராக் கடனாக மாறும் சூழல் உள்ளது.

எனவே, தமிழக அரசு, பிளாஸ்டிக் தடையை தள்ளி வைக்க வேண்டும். பிளாஸ்டிக் தடையை கண்டித்து, சென்னையில், 13ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

DINA MALAR
Date. 11/12/2018

-18-